
உ

துர்க்காதேவி துணை



தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## நிர்வாகசபை ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்கு விபரமும்

**01-01-2001 — 31-12-2001**

★★★

தெல்லிப்பழை

2002

உ
தேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை

### தர்மகர்த்தா சபை

துர்க்காதுரந்தரி, கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
*(தலைவர்)* J. P.
திருமதி ம. இராமநாதன்
*(பொதுச் செயலாளர்)*
திரு. பா. பாலகாங்கேயன் U. S. A.
திரு. க. ஜனநாயகம், U. K.
திரு. நா. திருநாவுக்கரசு
திரு. அ. சிவபாதசுந்தரம்
Dr. ந. புவனேந்திரன், U. K.
திரு. நா. தவநாதன்
*(நிர்வாகச் செயலாளர்)*
திரு. அ. சண்முகநாதன்
*(நிர்வாகப் பொருளாளர்)*

### நிர்வாக சபை

துர்க்காதுரந்தரி, கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
*(தலைவர்)* J. P.
திரு. மு. சபாநாதன், J. P. U. M.
பதில் நீதிபதி
*(உப தலைவர்)*
திரு. ந. செல்வநாயகம்
*(உப தலைவர்)*
திருமதி ம. இராமநாதன்
*(பொதுச் செயலாளர்)*
திரு. நா. தவநாதன்
*(நிர்வாகச் செயலாளர்)*
திரு. அ. சண்முகநாதன்
*(பொருளாளர்)*
திரு. சு. ஏழூர்நாயகம்
*(உப-பொருளாளர்)*
திரு. சி. அருளானந்தசிவம்
திரு.ச. ஆறுமுகநாதன்
திரு.ச. விநாயகரத்தினம்
திரு. சி. குமாரசாமி
திரு. நா. தவமணிநாயகம்
திரு. மு. அருளையா
திரு. ச. கந்தையா
திரு. சு. முருகையா
திரு. ஆறு. திருமுருகன், B. A.
திரு. சி. புஸ்பநாதன்
*(கொழும்புப் பிரதிநிதி)*
திரு. நா. சிவநாதன்
*(தெ. இ. இ. சங்கப் பிரதிநிதி)*

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

# ஆண்டறிக்கை — 2001

## 01 - 01 - 2001 தொடக்கம் 31 - 12 - 2001 வரை

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ஆண்டறிக்கையையும் தேவஸ்தானத்தின் 01-01-2001 முதல் 31-12-2001 வரையிலான அறிக்கையையும் வழமை போல துர்க்கை அம்பாள் அடியார்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இவ் நிர்வாக அறிக்கைகளை தொடர்ந்து சமர்ப்பித்து வருவதையிட்டு பெருமிதம் கொள்கின்றோம். மாதந்தோறும் ஒரு நிர்வாக சபை கூட்டம் என்ற அடிப்படையில் இவ் வருடம் பன்னிரண்டு நிர்வாக சபைக் கூட்டங்களும் ஒரு சிறப்புக் கூட்டமும் இரண்டு திருப்பணிக் கூட்டமும் நடைபெற்றன.*

**தேவஸ்தான நித்திய பூசைகள் :**

*சென்ற காலத்தில் நாட்டின் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக நித்திய பூசை நேரங்களில் மாற்றங்களைச் செய்துள்ளோம். அதன் பிரகாரம் காலை 7-00 மணி, முற்பகல் 11-00 மணி, பிற்பகல் 4-00 மணி, மாலை 5-30 மணி ஆகிய நேரங்களில் அம்பாள் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அடியார்கள் நித்திய பூசைகள், அபிஷேகங்கள் என்பவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றார்கள்.*

**சிவாச்சாரியர்கள், அந்தணர்களின் பணிகள் :**

கடந்த இருபத்தொரு ஆண்டுகளுக்கு மேலாக தேவஸ்தான பிரதம குருவாக இருந்து பயபக்தியுடனும் மலர்ந்த முகத்துடனும் அருட்பணியாற்றி வரும் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களுக்கு எமது வணக்கமும் பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

கடந்த இருபத்து நான்கு வருடங்களுக்கு மேலாக உதவிக் குருக்களாக கடமையாற்றி வரும் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் தமது ஆலயக் கடமைகளுடன் மேலாக புராண பட்டன நிகழ்ச்சிகள், திருமுறை ஓதல் ஆகியவற்றில் கூடிய அக்கறையுடன் பங்களிப்புச் செய்து வருவதுடன் திருமணம் போன்ற நிகழ்வுகளையும் செவ்வனே நிறைவேற்றித் தருவதும் குறிப்பிடக் கூடிய அம்சமாகும். அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் நன்றியையும் தெரிவிக்கின்றோம்

கோவிலின் நித்திய பூசைக்குரிய ஆயத்தங்கள், வசந்த மண்டப அலங்காரங்கள், அபிஷேகப் பொறுப்பு போன்ற பணிகளை ஆற்றி வரும் பிரம்மஸ்ரீ சு. சுந்தரராச சர்மா அவர்கள் தமது பணியை மிகவும் கண்ணியமாக நிறைவேற்றி வருகின்றார்.

மற்றும் பூசைகளுக்கு உதவியாகவும் களஞ்சியப் பொறுப்பினை ஏற்று அதிகாலை முதல் மாலை வரை நித்திய பூசைகள், அபிஷேகங்கள் ஆகியன செவ்வனே நடைபெற தனது பூரண பங்களிப்பினைச் சிறப்புடன் ஆற்றி வரும் சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா அவர்களையும் நன்றியோடு பாராட்டுகின்றோம்.

பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்தி சர்மா அவர்கள் நித்திய பூசைக்குரிய உதவிகளையும் பாகசாலை பொறுப்புக்களையும் செவ்வனே ஆற்றி வருவதையிட்டு எமது பாராட்டுக்களை தெரிவிக்கின்றோம். செவ்வாய்க்கிழமைகளிலும், விஷேட தினங்களிலும் சமயா சமய

சேவை ஆற்றும் பிரம்மஸ்ரீ ந. இராமச்சந்திர சர்மா, பிரம்மஸ்ரீ சு. லகுதர சர்மா, சிவஸ்ரீ சோ. ரஜிதகிரித குருக்கள் அவர்களையும் நன்றியோடு பாராட்டுகின் றோம்.

**தேவஸ்தான உத்தியோகத்தர்கள் சிற்றூழியர்கள் சேவை:**

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தேவஸ்தானத்திலே தங்கியிருந்து தன்னலன் கருதாத சேவையினை ஆற்றும் திரு. கா. சிவபாலன் அவர்களின் பணி மிகவும் பாராட்டுக்குரியதாகும். நாளாந்தம் தேவஸ்தானத்திற்கு வரும் பணம், பவுண் மற்றும் பொருட்களுக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டு பதிவதுடன் அவற்றினை நேர்மையுடனும் விசுவாசதுடனும் பேணிக் காத்து வருபவர் என்றால் மிகையாகாது. அத்துடன் சிறந்த சமய தமிழ் அறிவுடன் கற்றோரைத் தகுதி அறிந்து மதிக்கும் திறனும் இவரிடம் இருப்பது பாராட்டுக் குரிய அம்சமாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தேவஸ் தான நிதி அலுவலகத்தில் திரு. புண்ணியமூர்த்தி ஸ்ரீ காந்தன் அவர்கள் பணியாற்றி வருகின்றார். இவர் நிதி அலுவலகப் பணிகள், பற்றுச் சீட்டு பதிதல் கடி தங்களுக்கு பதில் எழுதுதல் போன்ற பல்வேறு பணி களை செவ்வனே ஆற்றி வருவதையிட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக் கின்றோம். திரு. வை. கணேசானந்தம் அவர்கள் காலை தொடக்கம் மாலை வரையும் நித்திய பூசை, அபிஷேகம் என்பவற்றிற்கு உதவிவருவது பாராட்டுக் குரியதாகும்.

ஆலய உட்புற, வெளிப்புற பணிகளை சிறப்புடன் கண்காணித்து வரும் திரு. வி. சிவகுமாரன் அவர்க ளுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கி றோம். ஆலய பூசை சம்பந்தமான பொருட்கள் கொள் வனவு கொடுப்பனவுப் பொறுப்பு, தோட்டவேலைகள்,

மற்றும் ஆலயத்திருப்பணிகள் ஆகியவற்றை கண் காணித்து நிறைவேற்றுபவர் இவர். இவருக்கு தேவஸ் தானத்தின் பாராட்டு நிரம்ப உரித்தாகுக

தேவஸ்தானத்தில் சிற்றூழியர்களாகவும், சமயோசித தொண்டர்களாகவும், இதர பணியாளர்களாகவும், அன்னதான உதவியாளர்களாகவும் ஒன்பது பேர் நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் தாம் பெறும் வேதனத்திலும் பார்க்க ஆற்றுகின்ற கடமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். அவர்களுடைய பெயர்கள் பின்வருமாறு :

1. திரு. பொ. தியாகராஜா
2. திரு. செ. வல்லிபுரம் ( 02-03-2002 மறைவு )
3. திரு. சு. சுப்பிரமணியம்
4. திரு. வ. கந்தையா
5. திரு. பொ. பாலகுமார்
6. திரு. நீ. நாகமுத்து
7. திரு. வே. பாக்கியமுத்து
8. திரு. க. கிருஷ்ணகுமார்
9. திரு. க. அருள்தாஸ்

**உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள் வழங்கும் ஆதரவு :**

தேவஸ்தான பணிகளுக்கு வேண்டிய அன்பளிப்புக் களை எவ்வித குறையுமின்றி தபால் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும், தேவஸ்தானத்திற்கு நேரில் வந்தும் உதவிவரும் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் நலன்விரும்பிகள், அனைவருக்கும் முதலில் எமது நன்றி கள் உரித்தாகுக. இவர்கள் அனைவரும் தாராளமாக உதவுவதால் ஆலயத்தில் பணிபுரியும் அந்தணப் பெரு மக்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உதவுதல்,

குறிப்பாக நித்திய பூசைகள் பல்வேறு சமுகப்பணிகளுக்கும், ஆலய புனருத்தாரண வேலைகளுக்கும் போதியதாக செலவு செய்யக் கூடியதாக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். இவ் வருட அன்பளிப்புக்களில் குறிப்பிடக் கூடிய விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. திருமதி கமலேஸ்வரி நந்தபாலன் — ஜேர்மனி | 39,630-90 |
| 2. | Dr. R. ஸ்ரீ ரவிந்திரன் அவுஸ்திரேலியா | 46,250-00 |
| 3. | Dr. மு. கணேசன் — அமெரிக்கா | 25,000-00 |
| 4. | திரு. செல்வஜோதி — K. S. A. | 20,000-00 |
| 5. | திரு. கதிரவேலு ரஜீவன் — U. K. | 100,000-00 |
| 6 | திரு. விவேகானந்தன் குமாரசாமி — சுவிஸ் | 22,113-00 |
| 7. | திருமதி பாக்கியம் சிவகுரு — அவுஸ்ரேலியா | 40,000-00 |
| 8. | திரு. S. அருளானந்தன் — அவுஸ்ரேலியா | 46,250-00 |
| 9. | திரு. A. பரமேஸ்வரன் — அவுஸ்ரேலியா | 23,125-00 |
| 10. | திரு. சோ. இராமநாதன் — லண்டன் | 51,000-00 |
| 11. | திருமதி சந்திரிக்கா குமார் — கனடா | 29,600-00 |
| 12. | திருமதி பாலா குடும்பம் — சிங்கப்பூர் | 24,000-00 |
| 13. | செல்வி வர்ணஜா வர்ணச்சந்திரன் — மட்டக்களப்பு | 50,000-00 |

**நிதி நிர்வாகம்:**

தேவஸ்தான நிதி நிர்வாகம் செம்மையாகவும் உண்மையாகவும் அமைவதற்கு உதவியாக அலுவலகத்தில் முழுநேரப் பணியாற்றிக் கொண்டிருக்கும் திரு. கா. சிவபாலன் அவர்களுக்கும் அவருக்கும் உதவியாக கடமை

ஆற்றும் திரு. பு. ஸ்ரீகாந்தன், செல்விகள் த. மஞ்சுளா ச. ரேவதி, த. தவனேஸ்வரி ஆகியோருக்கும் விஷேடமாக நன்றி கூறுகிறோம்.

**கணக்காய்வாளர்கள்:**

உட்துறைக் கணக்காய்வாளராகக் கடமை ஆற்றி வரும் திரு. இ. யுவன்ராஜ் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலத்துக்குக் காலம் தேவஸ்தானத்தின் வருடாந்த கணக்காய்வினை சிறப்பாக அமைத்து உதவும் செல்வேந்திரா பட்டயக் கணக்காளர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் அவரின் உதவியாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம். 2001 ஆண்டுக்குரிய வரவு செலவு கணக்கறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**சிறப்புமிகு உற்சவங்களும் விழாக்களும்:**

| | | |
|---|---|---|
| அபிராமி பட்டர் விழா | 24-01-2001 | புதன்கிழமை |
| மகா சிவராத்திரி விழா | 21-02-2001 | புதன்கிழமை |
| இலட்சார்ச்சனை விழா | 26-02-2001 | திங்கள் முதல் |
| | 07-03-2001 | புதன் வரை |
| மாசிமகப் பெருவிழா | 08-03-2001 | வியாழக்கிழமை |
| வருடாந்தப் பொங்கல் விழா | 10-04-1001 | செவ்வாய்க்கிழமை |
| விஷு வருடப்பிறப்பு விழா | 14-04-2001 | சனிக்கிழமை |

ஆடிச்செவ்வாய் விழா இவ்வாண்டு 17-07-2001, 24-07-2001, 31-07-2001, 07-08-2001, 14-08-2001 ஆகிய ஐந்து செவ்வாய்க்கிழமைகளிலும் நடைபெற்றது. ஆடிச்செவ்வாய் காலங்களில் காலை 6-00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், முற்பகல் 10-00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் திருவிழா மாலை 3-00 மணிக்கு திருவீதியுலா என்பன சிறப்பாக நடைபெற்றது. பெருமளவு

அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாடு செய்து அன்னதான நிகழ்விலும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

**மஹோற்சவ பெருவிழா 2001:**

மகோற்சவ பெருவிழாவின் முக்கிய விழாவான கொடியேற்றம் 20-08-2001 திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் மிகச் சிறப்பாக பணி புரிந்து கொடி ஏற்ற உற்சவத்தை பக்தி பூர்வமாக நிறைவேற்றினார். மற்றும் பிரதான உற்சவமாகிய வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர் உற்சவம், தீர்த்த உற்சவம் முறையே 28-08-2001, 29-08-2001 30-08-2001, 31-08-2001 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. தேர் உற்சவத்தில் அன்றும், தீர்த்த உற்சவத்தில் அன்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர், யாழ். வானொலியினர் நேர்முக வர்ணனை செய்தனர். நாட்டின் நான்கு புறத்திலும் உள்ள அடியார்கள் பெருந்திரளாக வருகைதந்து சிறப்பித்தனர்.

**நவராத்திரி விழா:**

நவராத்திரி விழா 17-10-2001 புதன்கிழமை தொடக்கம் 25-10-2001 வியாழக்கிழமை வரையுள்ள ஒன்பது நாட்களும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை வேளையில் ஸ்ரீ சக்கர பூசை, நவராத்திரி கொலுபூசை நடைபெற்றது. துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் கூட்டு வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது. பத்தாம் நாளான விஜயதசமி அன்று மானம்பூ உற்சவத்தில் அம்பாள் வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று விஷேட நிகழ்வான வித்தியாரம்பம் பிள்ளைகளுக்கு செய்யப்பெற்றது. அன்று பகல் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட அடியார்கள் கேதார கௌரி விரத நோன்பை அனுட்டித்தார்கள்.

கேதார கௌரி விரத பூர்த்தி 14-11-2001 புதன் கிழமை. தீபாவளி விழா 14-11-2001 புதன்கிழமை.

**சர்வாலய தீபம் :**

திருவிளக்குப் பூசை 30-11-2001 வெள்ளிக்கிழமை அன்று சர்வாலயதீபம் ஏற்றப்பட்டது.

**திருவெம்பாவை :**

திருவெம்பாவை இவ்வாண்டு 21-12-2001 வெள்ளிக் கிழமை ஆரம்பமானது. 30-12-2001 ஞாயிறு பூர்த்தி பெற்றது. பூர்த்தி தினத்தன்று ஆருத்திரா தரிசன அபிஷேகம் பூசை, திருவூஞ்சல், அம்பாள் திருவீதியுலா என்பன சிறப்பாக நடைபெற்றது.

**திருவாதவூரடிகள் புராண படனம் :**

திருவெம்பாவை காலங்களில் பத்து நாட்களும் திருவாதவூரடிகள் புராண படனம் மிகச் சிறப்பாக நடை பெற்றது. பௌராணிகர்கள், புராணம் கேட்கும் அடியார்கள் பலர் இந் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். புராண படனப் பூர்த்தி அன்று தேவஸ்தானத்தால் பௌராணிகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**நல்லைக் கந்தன் மகோற்சவகால அன்னதானம் :**

எங்கள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நல்லைக் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு இருபத்தைந்து தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றோம். மேலும் விஷேட உற்சவ காலங்களில் தண்ணீர்ப் பந்தல் நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டது. அன்னதான நிகழ்வுக்கு யாழ் குடாநாட்டு வர்த்தகப் பெருமக்களின் பேராதரவுகளுக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னதான பணிகளுக்கு மணி மண்டப பணியாளர்கள், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் உள்ளிட்ட அனைவரும் உதவி வருகின்றனர்.

**திருமகள் அழுத்தகம் சுன்னாகம்:**

சுன்னாகத்தில் இயங்கி வந்த தேவஸ்தானத்துக்குச் சொந்தமான மேற்படி திருமகள் அழுத்தகம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கு அருகில் பிரதான வீதியில் அமைந்த வசதியான வீடு ஒன்றில் இயங்குகின்றது அச்சகப் பணிகள் நல்லபடி நடைபெற்று வருகின்றன தேவஸ்தான, மகளிர் இல்ல, நல்லூர் மணி மண்டபப் பணிகள் சார்பான அச்சுவேலைகளை மிகச் செம்மையாக நிறைவேற்றித் தருவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பாரம்பரிய அச்சுக்கலையை விரும்பும் நூலாசிரியர்களின் தமிழ், சமய, இலக்கிய, வரலாற்று நூல்கள் மிகச் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்:**

மேற்படி சங்கம் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் தேவஸ்தானத்தோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பகால அங்கத்தவர்கள் சிலர் வெளிநாடு சென்றாலும் ஏனையோர் ஆலயக் கடமைகளிலும், சிரமதானப் பணிகளிலும், சரியைத் தொண்டிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஆலய வளர்ச்சியிலும், அன்னதானப் பணிகளிலும் பெரும் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள். செவ்வாய்க்கிழமைகளிலும், விஷேட தினங்களிலும், மகோற்சவகாலங்களிலும் இவர்கள் ஆற்றி வரும் சேவை பாராட்டுக்குரியது. வாரந் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலய மண்டபங்களை கழுவி தூய்மை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த பல ஆண்டுகளாக இந்து இளைஞர் சங்கத்தின் தலைவராக இருந்து நற்பணியாற்றி வரும் திரு. நா. சிவநாதன் அவர்கள் எமது நிர்வாக சபையின் உறுப்பினராகப் சங்கப் பிரதிநிதியாக இருந்து கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. துர்க்காதேவியின் திருவருளினால் இச்சங்கம் ஓங்கி உயர்வடைய பிரார்த்திக்கின்றோம்.

**துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை:**

மேற்படி சபையானது 1979ஆம் ஆண்டு நியமிக்கப் பட்டு கடந்த இருபத்துமூன்று ஆண்டுகளாக நிறைவான பணிகளை ஆற்றி வருகின்றது. தேவஸ்தான தலைவரே தொடர்ந்தும் இச்சபையின் தலைவராக இடம்பெற்று வருகின்றார். உபதலைவர், செயலாளர், பொருளாளர் காலத்துக்கு காலம் தேவை நோக்கித் தெரிவு செய்யப் படுகின்றார்கள். இவ்வாண்டு தமது இருபத்தோராவது ஆண்டு விழா 08-07-2001 ஞாயிறு நடாத்தினர். கோயி லின் சரியைத் தொண்டு, அன்னதானப் பணிகள் ஆகிய வற்றிலும் இவர்களது பங்களிப்பு இன்றியமையாதது. கொழும்பு, வெளிநாடு போன்ற இடங்களில் சென்று வசித்தாலும் சந்தாப்பணம் அனுப்பியும் அன்பளிப்புச் செய்தும் தமது தொடர்பைப் பலப்படுத்திக் கொள்ளும் ஏனைய அங்கத்தவர்களது பணியும் குறிப்பிடத்தக்க தாகும். எல்லாம் வல்ல துர்க்கை அம்பாள் இவர்களின் பணியையும் மேலோங்க வைப்பாராக என்று பிரார்த் திக்கின்றோம்.

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J P. அவர்களின் பிறந்த நாள் அறக்கொடை விழா:**

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களின் பிறந்த நாள் அறக்கொடை விழா ஆண்டு தோறும் தை மாதம் 7ஆம திகதி கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது பிறந்த நாள் அற நிதியத்தின் வட்டிப்பணம் சமய, சமூக, கல்வி நிறு வனங்கள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம், இடம்பெயர்ந்த அந்தணர்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் நலன், கல்விமான்கள், அறிஞர்கள் ஆகியோரைக் கௌரவித்தல் போன்ற பல்வேறுபட்ட பணிகளுக்கு இப்பணம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அன்பர்கள் யாவரும் இதனை அறிவர். இவ்வாண்டு 07-01-2001 ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வுபீட பீடாதிபதி பேராசிரியர் அ.

சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் காலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. விழாவின் போது ஆசியுரைகள், சிறப்புரைகள், வாழ்த்துரைகள் ஆகியன இடம்பெற்றன. சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் எழுதிய ''பெண்மைக்கும் இணையுண்டோ'' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் ஆய்வுரையை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் வழங்கினார். கண் சத்திர சிகிச்சைக்கான அன்பளிப்பு இணுவில், சுன்னாகம், மானிப்பாய் அரிமாக் கழகத்துக்கு சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் வழங்கினார். மாலை நிகழ்ச்சியாக வலிகாமம் கல்வி வலயப் பிரிவிலும், யாழ்ப்பாணம் கல்வி வலயப் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள 150 மாணவர்களுக்கு உதவு தொகை வழங்கப்பட்டது. கடந்த ஆண்டுகள் போல் இவ்வாண்டும் மேலும் அம்மையார் அவர்களின் பிறந்த நாள் விழாவை கொண்டாடிய நிறுவனங்கள் பல. இவற்றில் கனடா சைவசித்தாந்த மன்றமும் அதன் தலைவருமான திரு. தி. விஸ்வலிங்கம் அவர்கள் நன்றிக்குரியவர் ஆவார்.

இலண்டன் கனக துர்க்கை அம்மன், இலண்டன் சிவயோக நிறுவனம் அதன் தலைவர் திரு. க. சீவரத்தினம், பிரித்தானிய இந்துக் கோயில் நிறுவனம் என்பன குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியசுவாமி கோயில், கொழும்பு அகில இலங்கை இந்துமாமன்றம் ஆகியவை எமது நன்றிக்குரியவை ஆகும்.

ஆண்டு தோறும் அறக்கொடை அறநிதியத்துக்கு ஆதரவு வழங்கி வரும் அன்பர்கள் அனைவரும் எமது பாராட்டுக்குரியவர்கள்.

எங்கள் நிர்வாகசபையைச் சேர்ந்த செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் தமது சமய சொற்பொழிவுகளுக்கு வெளிநாடு சென்ற வேளை

அம்மையார் அவர்களின் அறநிதியத்துக்கு அன்பளிப்பு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது என்பதை மிக நன்றியுடன் அறியத்தருகிறோம்.

**சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம் :**

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களின் பவள விழா ஆண்டில் சைவத்தமிழ் ஆய்வு நூலகம் அத்திவாரமிடப்பட்டது. யாழ்ப்பாணம் பெரும் கல்வி வளம் பெற்ற நாடு என்பது யாவரும் அறிவர். எனினும் சைவசித்தாந்த தமிழ் நூல்களை ஆய்வு செய்வதற்கு சிறந்த இடவசதி இல்லாத குறையை நீக்கும் முகமாக அமைக்கப்பட்டது ஆய்வு நூலகம். இங்கு திருமுறைகள், சஞ்சிகைகள், கோயில் கும்பாபிஷேக மலர்கள், சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள், வரலாற்று நூல்கள், கலைக் களஞ்சியம் போன்ற பல நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்திருப்பணி சுமார் 2594,404-25 செலவு செய்து ஆய்வு நூலகமாக அமைக்கப்பெற்றது. இத்திருப்பணிக்கு திரு. இந்திரன் காராளசிங்கம் அவர்கள் ரூபா 25000-00 இவ்வாண்டு அன்பளிப்பு செய்துள்ளார். கடந்த ஆண்டு சேர்க்கப்பட்ட அன்பளிப்புக்களும் இவற்றில் அடங்கியுள்ளன.

**அன்ன சத்திரம் :**

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானம் அன்னதானப் பணியை மேலும் மேலும் விரிவு படுத்தும் நோக்காக இவ்வாண்டு 108 அடி நீளமான "அன்னசத்திரம்" என்னும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. புதுப் பொலிவுடன் காட்சிதரும் அன்னசத்திரம் 14-08-2001 செவ்வாய்க்கிழமை எங்கள் தேவஸ்தான தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகியது. விழாவில் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இவ் அன்ன சத்திர திருப்பணிக்கு ரூபா

1583,296-00 செலவாகியது. இதில் துர்க்காபுரம் மகளிர் இல்ல அன்பளிப்பாக ரூபா 500,000-00 பெறப்பட்டது. மேலும் 50000-00 ரூபாவை அவுஸ்ரேலியாவில் இருந்து திருமதி சேதாம்பிகை சண்முகசோதி அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள். அன்னதானப் பணியின் சிறப்பை பின்வரும் பெரியபுராணப் பாடலில் காண்போம்.

''மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்''

## பெரியபுராணப் படனம் :

இவ்வாண்டு பெரியபுராண படனம் 09-05-2001 புதன்கிழமை ஆரம்பமாகி 12-07-2001 வியாழக்கிழமை பூர்த்திபெற்றது. புராணபடன நிகழ்வில் அடியார்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பௌராணிகர்கள் கௌரவிக்கப்பட்டனர். புராணபடன பூர்த்தி அன்று அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் சிறப்பாக நடைபெற்றது.

## அறநெறிப்பாடசாலை :

அறநெறிப்பாடசாலை, எங்கள் நிர்வாகசபைத் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள் தேவஸ்தான நிர்வாகசபை தலைவராக பணிபுரிந்து இருபத்தைந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு 20-01-2001ல் ஆரம்பிக்கப்பெற்றது. கோயிலின் சூழலில் உள்ள 150 மாணவர்கள் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்றரர்கள். வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் பாடசாலை நடைபெற்றுவருகின்றது. மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க நான்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கு ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நன்னூல், பாலபாடம் திருக்குறள், நீதி நூல்கள் ஒழுக்கநெறி, திருமுறைகள் என்பன கற்பிக்கப்படுவேது குறிப்பிடத்தக்கது.

**காணி அன்பளிப்பு :**

எங்கள் தேவஸ்தானத்திற்கு வடமேற்கு மூலையில் அமைந்த காணித்துண்டை திரு. செ. துரைரத்தினம் அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். ஒரு பரப்பும் 3.15 குளிப் பரப்பளவும் கொண்ட காணியை வழங்கியமைக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பொது அன்பளிப்புக்கள் :**

| | |
|---|---|
| பிறந்தநாள் விழாக்களுக்கு | 13500-00 |
| வைத்திய சிகிச்சை செலவுகளுக்காக வழங்கப்பட்டது | 36750-00 |
| கஷ்ட நிவாரணக் கொடுப்பனவுகள் | 28800-00 |
| திருமண நிகழ்ச்சிகளை முன்னிட்டு வழங்கிய அன்பளிப்பு | 20960-00 |
| பூப்புனித நீராட்டுவிழாக்களுக்கு | 8500-00 |
| அபரக்கிரியைகளுக்கு | 38000-00 |
| மருத்துவபீட நலன்புரிக் கழகத்துக்கு | 25000-00 |
| நூல்வெளியீடுகளுக்கும், முதல் பிரதிகளுக்கும் | 16000-00 |
| சனசமூக நிலையங்களுக்கு | 19000-00 |
| கல்விக்காக (வறுமைப்பட்ட மாணவர்களுக்கு பிரத்தியேக பாடபோதனைக்காக) | 57300-00 |
| உயர் கல்விக்காக வழங்கப்பட்ட அன்பளிப்பு | 10000-00 |
| பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கு | 28000-00 |
| பாடசாலைகளின் பரிசளிப்பு விழாக்களுக்கு | 44500-00 |
| மகாஜனாக் கல்லூரிக்கு (தெல்லிப்பழை) | 10000-00 |
| சைவப்புலவர் சங்க பணிகளுக்கு | 5000-00 |
| பொது அறிவுப் போட்டியை முன்னிட்டு யாழ். மாநகரசபைக்கு பரிசில் வழங்கல் | 5000-00 |
| சைவச்சிறுவர் இல்லத்துக்கு (முத்துத்தம்பி வித்தியாசாலை திருநெல்வேலி) | 25000-00 |
| வித்தகத்திற்கு – சாவகச்சேரி | 5000-00 |
| சாரதாதேவி ஆச்சிரமத்துக்கு – பருத்தித்துறை | 10000-00 |
| மகாதேவா ஆச்சிரமத்துக்கு – கிளிநொச்சி | 10000-00 |
| நல்லை ஆதீனத்துப் பணிகளுக்கு | 6000-00 |
| சந்நிதியான் ஆச்சிரம அன்னதானப் பணிக்கு | 5000-00 |

| | |
|---|---|
| அளவெட்டி – ஸ்ரீ நாகவரதநாராயணன் சுவாமி கோயிலுக்கு | 10000-00 |
| திருப்பணிவேலைகளை முன்னிட்டு-பல ஆலயங்களுக்கு | 22000-00 |
| உடுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஞானவைரவர் ஆலயப்பணிக்கு | 10000-00 |
| தோதரை அம்மன் ஆலயத் திருப்பணிக்கு – தெல்லி. | 30000-00 |
| கற்பக விநாயகர் ஆலயத் திருப்பணிக்கு – குப்பிழான் | 10000-00 |
| நகுலேஸ்வர ஆலயத் திருப்பணிக்கு – கீரிமலை | 10000-00 |
| வட்டுவடக்கு பிள்ளையார் கோயில் திருப்பணிக்கு (பிரமனாட்சி தோட்டம்) | 10000-00 |
| வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி – பவளவிழா | 5000-00 |
| பவளவிழா திரு. க. சிவராமலிங்கம் அதிபர் | 3000-00 |
| மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம். அபிவிருத்திச் சபைக்கு | 16500-00 |
| மல்லாகம் மகாவித்தியாலயம் விளையாட்டு மைதானம் வாங்குவதை முன்னிட்டு | 25000-00 |
| ஆக் நிறுவனத்துக்கு – உடுவில் | 5000-00 |
| நல்லைக்குமரன் மலர் முதல் பிரதி | 5000-00 |
| திரு. செ. மற்றாஸ்மெயில் மலர் வெளியீட்டுக்கு | 5000-00 |
| தெல்லிப்பழை – பெண்கள் தொண்டர்சபை ஆண்டுவிழா | 10000-00 |
| பணியாளர்களின் நலன் | 3000-00 |
| பவளவிழா – இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு | 40000-00 |
| இசைநடன நிகழ்ச்சிக்கு – இராமகிருஷ்ணமிசன் | 25000-00 |
| வில்லிசை நிகழ்ச்சிக்கு - சோக்கல்லோ சண்முகம் குழுவினர் | 20000-00 |
| ஒலிநாடாவும் அம்பாள் படங்களுக்கும் | 8800-00 |
| சமூக சேவைகளுக்கான அன்பளிப்புகள் | 17880-00 |
| பொதுவான அன்பளிப்புகள் (நானாவித சிறுசிறு அன்பளிப்புக்கள்) | 55755-00 |
| இவ்வாண்டு வழங்கிய பொது அன்பளிப்பு மொத்தம் | 774245-00 |

**நன்றி கூறுகின்றோம் :**

★ மதிப்பார்ந்த யாழ். அரச அதிபர் அவர்கள்

★ வலி-வடக்குப் பிரதேச செயலர் அவர்கள்

★ தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராமசேவகர்கள்

★ உள்ளூர் வெளியூர் பத்திரிகைகளான தினக்குரல், வீரகேசரி, தினகரன், உதயன், வலம்புரி ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள்

★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு யாழ். சேவை - பலாலி பணியாளர்கள்

★ அன்பளிப்புக்களை வழங்கி ஆதரவு நல்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள்

★ மல்லாகம் கிருபா போட்டோ நிறுவனம், சுன்னாகம் யோகா போட்டோ நிறுவனம்

★ அன்னதானம் வழங்கி ஆதரவு நல்கும் அறக்கொடை வள்ளல்கள்

★ சரியைத் தொண்டுகள் ஆற்றும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை

★ இலங்கை வங்கி சுன்னாகம், பம்பலப்பிட்டி கிளைகள், யாழ். வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம். யாழ்ப்பாணம், வெள்ளவத்தை கிளைகள் இவற்றின் முகாமையாளர்கள், பணியாளர்கள்

★ கொழும்பில் தேவஸ்தானக் கடமைகளையும், வங்கிக் கடமைகளையும் சிறப்பாக நிறைவேற்றித் தரும் எமது நிர்வாக சபையின் கொழும்புப் பிரதிநிதி திரு. சி. புஸ்பநாதன் அவர்கள்

★ ஆண்டு தோறும் சமயச் சொற்பொழிவுகளின் பேரில் மேற்குலக நாடுகள் சென்று அம்பாளின் பெருமையையும், தேவஸ்தானத்தின் சிறப்பையும் பேசி வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவுகளைப் பெற்று வரும் நிர்வாக சபை உறுப்பினர் செஞ்சொற் செல்வர் ஸ்ரீ ஆறு. திருமுருகன் அவர்கள்

★ கோயில் வரைபடத்தை மிகுந்த சிரமத்தின் மத்தியில் வரைந்து, வரைபடம் தயாரித்து உதவிய நில அளவையாளர் திரு. வ. இரத்தினம் அவர்கள்

★ கோயில் அன்னதானப் பணிகளிலும், திருப்பணி வேலைகளிலும் கண்காணித்து உதவிவரும் திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள்

★ சுன்னாகம் திருமகள் அழுத்தகப் பணியாளர்கள்

★ சுன்னாகம், யாழ்ப்பாணம் இலங்கை மின்சார சபையினர்

★ தேவஸ்தான நீர், மின் வேலைகள் சீர் செய்து தரும் மல்லாகம் திரு. த. தயானந்தன் மா. சௌந்தரராசன் அவர்கள்

★ யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி நாகராசா கராஜ் முதல்வர் திரு. நாகராசா அவர்கள்

வணக்கம்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்

**திரு. அ. சண்முகநாதன்**
பொருளாளர்

**திரு. சு. ஏழூர்நாயகம்**
உப-பொருளாளர்

**திரு. நா. தவநாதன்**
**திருமதி மா. இராமநாதன்**
செயலாளர்

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

## 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வறிக்கை

மேற்படி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வினை மேற்கொண்டு பின்வருவனவற்றை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

01. **பொதுநிதி ரூபா 20228511-49**

*1-1-2001* இல் மீதியாக ரூபா *17009835-43* சதம் இருந்தது. இவ்வருடம் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 2761507-06 சதத்துடன் பவுண் அன்பளிப்பான ரூபா 447169-00 வினையும் சேர்க்கப்பட்டு இவ்வருட மீதியாக ரூபா 20228511-49 சதம் உள்ளது.

02. **அறக்கட்டளை நிதி ரூபா 1156600-00**

*1-1-2001* இல் மீதியாக ரூபா *1126600-00* உள்ளது. இவ்வருடம் ரூபா *30000-00* சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வருட இறுதி மீதியாக ரூபா *1156600-00* உள்ளது. ஆனால் நிலையான வைப்பில் ரூபா 5000/- வைப்பில் இடப்படல் வேண்டும்.

03. **ஒதுக்குநிதி ரூபா 1543262-35**

*1-1-2001* இல் உள்ள மீதி ரூபா *1543262-35* சதம் உள்ளது.

04. **கட்டிட நிதி ரூபா 577500-00**

இவ்வருடம் அன்னசத்திரம் கட்டிட நிதிக்காக ரூ 552500-00 வும் சிவத்தமிழ்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலக கட்டிட நிதியாக ரூபா 25000-00 வும் பெறப்பட்டுள்ளது.

05. **நிலையான சொத்துக்கள் ரூபா 11298842-63**

**கட்டிடம் ரூபா 6767328-20 சதம்**

*1-1-2001* இல் கட்டிட பெறுமதியான ரூபா 2725924-13 சதத்தினுடன் இவ்வருட சேர்க்கையான சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலக கட்டிட பெறுமதியாக ரூபா 2594404-25 சத

மும் அன்னசத்திரத்தின் கட்டிட பெறுமதியாக ரூபா 1583296-00 வும் ஆகும். இவ்வருட சேர்க்கைகளுக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படவில்லை. இவ்வருட கட்டிடப் பெறுமானத் தேய்வாக ரூபா 136296-18 கழிக்கப்பட்டும் மீதியாக ரூபா 6767328-20சதம் உள்ளது.

ஆய்வு நூலக தளபாடமாக ரூபா 169950-00வும் அன்னசத்திர தளபாடமாக ரூபா 7000-00வும் இவ்வருட சேர்க்கையாக உள்ளது. எனவே 1-1-2001இல் நிலையான சொத்து மீதியான ரூபா 7149535-31 சதம். இவ்வருட சேர்க்கையான ரூபா 4354650-25 சதத்தினை கூட்டி இவ்வருட பெறுமானத் தேய்வு ரூபா 205342-93 சதத்தினை கழிக்கப்பட்டும் இவ்வருட இறுதி மீதியாக ரூபா 11298842-63 சதம் உள்ளது.

06. திருவாபரணங்கள்

1. வெள்ளி ரூபா 31695-50

சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக உள்ளது.

2. பித்தளை ரூபா 37033-00

சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக உள்ளது.

3. பவுண் ரூபா 948449-00

சென்ற வருட மீதி ரூபா 679650-00வுடன் இவ்வருட அன்பளிப்பாக ரூபா 457169-00 கிடைக்கப்பெற்றன. ரூபா 188370-00 பெறுமதியான நகைகள் விற்கப்பட்டுள்ளது. எனவே இவ்வருட இருப்பாக ரூபா 948449-00 உள்ளது. இவை எம்மால் 1-1-2002இல் சரிபார்க்கப்பட்டன.

07. முதலீடு, திருமகள் அழுத்தகம்

முதலீட்டு வருமானமானது தேவஸ்தான கணக்கில் சேர்க்கப்படாமல் திருமகள் அழுத்தகத்தின் பெயரில் இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு இலக்கம் 12283இல் காட்டப்பட்டு வருகின்றது.

8. நிலையான வைப்பு ரூபா 4776683-95

1. வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் ரூபா 1927883-95

சென்றவருட மீதியே இவ்வருட மீதியாகவும் உள்ளது.

2. தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் ரூபா 1072200-00

சென்றவருட மீதியே இவ்வருட மீதியாகவும் உள்ளது.

3. தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் ரூபா 801600-00
சென்ற வருட மீதியாக பொதுநிதியாக ரூபா 275000-00 வும் அறக்கட்டளை வைப்பாக ரூபா 276600-00உடன் இவ்வருட வைப்பாக ரூபா 25000-00 சேர்க்கப்பட்டு ரூபா 301600-00 ஒதுக்குநிதி வைப்பாக ரூபா 225000/வும் இவ்வருட மீதியாக ரூபா 801600-00 உள்ளது.

4. இலங்கை வங்கி சுன்னாகம் ரூபா 425000-00
சென்றவருட மீதியே இவ்வருட மீதியாகவும் உள்ளது.

5. தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தை ரூபா 150000/-
சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக உள்ளது.

6. தேசிய சேமிப்பு வங்கி பம்பலப்பிட்டி ரூபா 400000-00
சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாகவும் உள்ளது.

09. சேமிப்பு வைப்பு ரூபா 5176, 931-91 சதம்:

1. தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 1001 சுன்னாகம்

| | |
|---|---|
| *01-01-2001 மீதி* | *1570425-01* |
| கூட்டுக. வட்டி | *134041-26* |
| | *1704466-27* |
| மீள எடுக்கப்பட்டது | *500000-00* |
| *31-12-2001 மீதி* | *1204466-27* |

2. தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 716 யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| *01-01-2001இல்* | *718262-35* |
| கூட்டுக வட்டி | *115215-78* |
| | *833478-13* |

3. வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் கணக்கு இல. 23701

| | |
|---|---|
| *01-01-2001இல் மீதி* | *1120154-19* |
| வட்டி | *143196-50* |
| | *1268350-69* |

4. இலங்கை வங்கி பம்பலப்பிட்டி கணக்கு இல. 100-37-111-8017

| | |
|---|---|
| *01-01-2001இல் மீதி* | *805960-72* |
| கூட்டுக வட்டி | *77237-81* |
| *31-12-2001இல் மீதி* | *883198-53* |

5. தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தை
கணக்கு இல. 19970-01-96262

| | |
|---|---|
| *01-01-2001இல் மீதி* | *849041-70* |
| *கூட்டுக வட்டி* | *89006-56* |
| | *938048-29* |

10. நடைமுறை வைப்புக்கள் ரூபா 1076638-94

*இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் கணக்கு இலக்கம் 3155இல் ரூபா 252675-44ஆம் இலங்கை வங்கி பம்பலப்பிட்டி கிளையில் கணக்கு இலக்கம் 00-37-02-000397-4ல் ரூபா 557654-49ம் வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் கிளையில் கணக்கு இல. 12692ல் ரூபா 266309-01 மொத்தமாக ரூபா 1076638-94 ஆகும்.*

11. கையிருப்பு ரூபா 10253-16

*01-01-2002இல் கையிருப்பானது எம்மால் பரிசீலிக்கப்பட்ட போது மேற்படி தொகை பொருளாளரிடம் இருந்தது. இவை எம்மால் சரிபார்க்கப்பட்டுள்ளது.*

*நடைமுறை பொறுப்பாக சென்மதியாளர் ரூபா 950654-25 ஏற்பட்டுள்ளது. இது குறிப்பு இலக்கம் 4ல் காட்டப்பட்டுள்ளது.*

12. வருமான செலவினம் :

*அர்ச்சனை ரூபா 799770-00ஆம் உண்டியல் ரூபா 296713-50ம் அன்பளிப்பாக ரூபா 3522371-25ஆம் வட்டியாக ரூபா 961640-64ம் மேற்குறிப்பிட்ட பிரதான வருமானங்களுடன் ஏனைய வருமானங்களும் சேர்த்து இவ்வாண்டு மொத்த வருமானமாக ரூபா 6311453-40 பெறப்பட்டுள்ளது*

செலவினம் :

*பொது அன்பளிப்பாக ரூபா 774245-00ம் மகளிர் இல்ல அன்பளிப்பாக ரூபா 120000-00ம் அந்தணர் பணியாளர் சம்பளமாக ரூபா 430000-00ம் பொது நிர்வாக செலவினமாக ரூபா 248108-25ம் மேற்குறிப்பிட்ட செலவினமாக ரூபா 3549946-34 ஏற்பட்டது. எனவே செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 2761507-06 ஏற்பட்டுள்ளது.*

13. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அறநிதியத்திற்கு வழங்கிய வட்டி ரூபா 45000-00 :

*அறக்கட்டளை நிதியாக பெறப்பட்ட ரூபா 300000-00 தேவஸ்தான கணக்கில் நிலையான வைப்பில் இடப்பட்டு இதன்*

வட்டி வருட வட்டியாக ரூபா 45000-00 அறநிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையை வருமானச் செலவுக் கணக்கில் வருமானமாகவும் செலவினமாகவும் காட்டப்பட்டுள்ளது.

14. அன்னதானம் :

இவ்வருடம் நல்லூர் அன்னதானம், தேவஸ்தான அன்னதானம் ஆகியவற்றிற்கு ரூபா 765434-62 அன்பளிப்பாக பெறப்பட்டுள்ளது. இவ்வருட அன்னதான செலவாக ரூபா 679541-50 ஏற்பட்டுள்ளது. இதன்விபரம் குறிப்பு 5இல் காட்டப்பட்டுள்ளது. நல்லூர் அன்னதானத்திற்காக 7மூடை அரிசி அன்பளிப்பாக பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தங்கள் நன்றியுள்ள

யாழ்ப்பாணம் ச. செல்வேந்திரா அன் கோ
03-04-2002. பட்டயக் கணக்காளர்

கா. சிவசுப்பிரமணியம்
முகாமையாளர்

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

## 2001 டிசெம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை

| | | |
|---|---|---|
| பொதுநிதி | குறிப்பு | |
| *01-01-2001இல் மீதி* | *17009835-43* | |
| கூட்டுக-செலவிலும் கூடிய வருமானம் | *2761507-06* | |
| | *19771342-49* | |
| பவுண் அன்பளிப்பு | *457-169-00* | *20228511-49* |
| **அறக்கட்டளை நிதி :** | | |
| *01-01-2001இல் மீதி* | *1126600-00* | |
| இவ்வருட வரவு | *30000-00* | *1156600-00* |
| ஒதுக்கு நிதி | | *1543262-35* |
| **கட்டிட நிதி :** | | |
| அன்னசத்திரம் | *552500-00* | |
| ஆய்வுநூலகம் | *25000-00* | *577500-00* |
| | | *23505873-84* |
| **சொத்துக்கள் :** | | |
| நிலையான சொத்து 1 | *11296842-63* | |
| **திருவாபரணங்கள் :** | | |
| வெள்ளி | *31695-50* | |
| பித்தளை | *37033-00* | |
| பவுண் 2 | *940449-00* | *12316020-13* |
| முதலீடு-திருமகள் அழுத்தகம் | | *1100000-00* |
| **வைப்புக்கள் :** | | |
| நிலையான வைப்பு 3 | *4776683-95* | |
| சேமிப்பு வைப்பு 4 | *5176931-91* | |
| | | *9953615-86* |
| **நடைமுறை வைப்புக்கள் :** | | |
| இலங்கை வங்கி சுன்னாகம் | | |
| க/கு இல. 3155 | *252675-44* | |

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டி | | |
| க/கு இல. 0037-02-000397-4 | 557654-49 | |
| வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | | |
| க/கு இல. 12692 | 266309-01 | |
| காசு | 10,253-16 | |
| | 1086892-10 | |
| நடைமுறை பொறுப்பு : | | |
| சென்மதியாளர் 5 | 950654-25 | 136237-85 |
| | | 23505873-84 |

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் மேலே காட்டப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,** J. P.
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 31-12-2001இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு பெறுவனவு கொடுப்பனவு கணக்கு. 31-12-2001இல் உள்ள ஐந்தொகை என்பன எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள் புத்தகங்கள் விபரங்கள் என்பன எம்மால் பரிசீலனை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எமக்குத் தரப்பட்ட ஏடுகளின்படியும் இதே திகதி உள்ள எமது அறிக்கைக்கு அமையவும் சரியாக உள்ளன என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

தங்கள் நன்றியுள்ள
**ச. செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்

யாழ்ப்பாணம்
03-04-2002

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

## 31-12-2001இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு

| வருமானங்கள் | குறிப்பு | | |
|---|---|---|---|
| அர்ச்சனை | | | 799770-00 |
| உண்டியல் | | | 296713-50 |
| அன்பளிப்பு | | | 3522371-25 |
| உபயம் | 6 | | 251753-50 |
| அன்னதானம் | 7 | | 85893-12 |
| விசேட உற்சவங்கள் | 8 | | 41490-39 |
| திருமணம் | | | 176633-00 |
| வட்டி | | | 961640-64 |
| யோகசுவாமிகள் குருபூசை | | | 2000-00 |
| வாடகை - தபால் கந்தோர் | | | 6600-00 |
| நானாவித வருமானம் | 10 | | 166588-00 |
| | | | 6311453-40 |
| கழி. செலவினங்கள் | | | |
| மகோற்சவம் | 11 | 43893-20 | |
| தபால் அர்ச்சனை | 12 | 16027-00 | |
| நித்திய பூசை | 13 | 38343-50 | |
| பொது அன்பளிப்பு | 14 | 774245-00 | |
| மகளிர் இல்ல அன்பளிப்பு | | 120000-00 | |
| அந்தணர் பணியாளர் சம்பளம் | | 430000-00 | |
| போக்குவரத்து செலவு | | 51830-00 | |
| தீபாவளி | | 39365-00 | |
| புதுவருட பிறப்பு | | 47405-00 | |
| விசேட சேவைக் கொடுப்பனவு | | 112750-00 | |
| சேம உதவு தொகை | | 47550-00 | |
| திறப்பு விழா செலவு | 15 | 81356-00 | |
| திருப்பணி | 16 | 412523-00 | |
| பொதுநிர்வாகச் செலவு | 17 | 248108-25 | |
| திருத்தமும் பராமரிப்பும் | 18 | 59948-75 | |
| | | 2523344-70 | 6311453-40 |

| | | | |
|---|---|---|---|
| மீதி கீழ் கொ. வ. | | 2523344-70 | 6311453-40 |
| பொது உபசாரம் | | 35790-00 | |
| காகிதாதிகள் | | 10195-50 | |
| அச்சகச் செலவு | | 80700-00 | |
| தொலைபேசி | | 47483-00 | |
| கணக்காய்வு கட்டணம் | | 28000-00 | |
| விறகும் எரிபொருள் | | 65825-64 | |
| மின்சார கட்டணம் | | 136970-00 | |
| கோசாலை | | 9000-00 | |
| அகதிகள் பராமரிப்பு | | 5600-00 | |
| தோட்டம் | 19 | 68752-50 | |
| அறநெறி பாடசாலை | | 114334-00 | |
| பெரியபுராண பூர்த்தி | 20 | 11750-00 | |
| ஆறுமுகநாவலர் குருபூசை | | 1300-00 | |
| வீதி அமைத்தலும் திருத்தலும் | | 159627-00 | |
| வங்கி கட்டணம் | | 931-10 | |
| அறநிதிய வட்டி | | 45000-00 | |
| பெறுமானத் தேய்வு | | 205342-93 | 3549946-34 |
| செலவிலும் கூடிய வருமானம் | | | 2761507-06 |

01-01-2001இல் மீதி

| | | |
|---|---|---|
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 9864917-92 | |
| நடைமுறைக் கணக்கு | 793985-41 | |
| காசு | 22880-64 | 10681783-97 |

31-12-2001இல் மீதி

| | | |
|---|---|---|
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 9953615-86 | |
| நடைமுறை வைப்புக்கள் இலங்கை வ. | 252675-44 | |
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டி | 557654-49 | |
| வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | 266309-01 | |
| காசு மீதி ,, | 10253-16 | 11040507-96 |

குறிப்பு இலக்கம் 05

சென்மதியாளர் ஆய்வு நூலகம் :

| | |
|---|---|
| கட்டிட ஒப்பந்தக்காரர் | 236421-25 |
| மின் இணைப்பாளர் | 94283-00 |
| தளபாடக் கொள்வனவு | 169950-00 |

**பிற நிறுவனங்களுக்குரிய அன்பளிப்பு :**

| | |
|---|---|
| கிளிநொச்சி கணேசானந்தா மகாதேவா ஆச்சிரமம் | 50000-00 |
| வன்னேரிக்குளம் யோகசுவாமிகள் திருவடி நிலையம் | 50000-00 |
| மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் | 50000-00 |
| அன்பு இல்லம் உள்ளிட்ட நான்கு நிறுவனங்கள் திருகோணமலை | 200000-00 |
| பருத்தித்துறை சாரதா ஆச்சிரமம், உடுவில் வாழ்வகம் உள்ளிட்ட 5 நிறுவனம் | 50000-00 |
| | 950654-25 |

குறிப்பு இலக்கம் 6

உபயம்

| | |
|---|---|
| மொத்த வரவு | 746015-00 |
| மொத்த செலவு | 494261-50 |
| தேறிய வரவு | 251753-50 |

குறிப்பு இலக்கம் 14

பொது அன்பளிப்பு :

| | |
|---|---|
| பிறந்ததின விழா | 13500-00 |
| வைத்திய சிகிச்சைக்கான செலவு | 36750-00 |
| கண்டை நிவாரணம் கொடுப்பனவு | 28800-00 |
| திருமண அன்பளிப்பு | 20960-00 |
| பூப்புனித நீராட்டு விழா | 8500-00 |
| அபரக் கிரியைகள் | 38000-00 |
| மருத்துவபீட நலன் புரிக் கழகம் | 25000-00 |
| நூல் வெளியீடும் முதல் பிரதியும் | 16000-00 |
| சனசமூக நிலையங்கள் | 19000-00 |
| கல்விக் கொடுப்பனவு | 57300-00 |
| உயர் கல்வி | 10000-00 |
| பாடசாலைகள் ( விளையாட்டுப் போட்டி ) | 28000-00 |
| பரிசளிப்பு விழா | 44500-00 |
| மகாஜனா கல்லூரி தெல்லிப்பழை | 10000-00 |
| சைவப் புலவர் சங்கம் | 5000-00 |
| பொது அறிவுப் போட்டி மாநகர சபை | 5000-00 |
| சைவச் சிறுவர் இல்லம் ( முத்துத்தம்பி வித்தியாலயம் ) | 25000-00 |
| சாவகச்சேரி வித்தகம் | 5000-00 |
| சாரதாதேவி ஆச்சிரமம் – பருத்தித்துறை | 10000-00 |

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி மகாதேவி ஆச்சிரமம் | | 10000-00 |
| நல்லை ஆதீனம் | | 6000-00 |
| சந்நிதியான் ஆச்சிரமம் | | 5000-00 |
| அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாரயண தேவஸ்தானம் | | 10000-00 |
| பல ஆலயங்கள் – திருப்பணி | | 22000-00 |
| உடுவில் ஸ்ரீ கந்தசாமி ஞானவைரவர் ஆலயம் | | 10000-00 |
| தெல்லிப்பழை – தோதரை அம்மன் ஆலய திருப்பணி | | 30000-00 |
| கும்பிழான் கற்பக விநாயகர் ஆலய திருப்பணி | | 10000-00 |
| கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய திருப்பணி | | 10000-00 |
| வட்டு வடக்கு பிள்ளையார் ஆலய திருப்பணி (பிரமனாட்சி தோட்டம்) | | 10000-00 |
| பவளவிழா – | | |
| வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி | 5000-00 | |
| திரு. க. சிவராமலிங்கம் அதிபர் | 3000-00 | 8000-00 |
| மல்லாகம் அபிவிருத்திச்சபை | | 16500-00 |
| மல்லாகம் மகாவித்தியாலயம் – விளையாட்டு மைதானம் | | 25000-00 |
| ஆக்நிறுவனம் உடுவில் | | 5000-00 |
| நல்லை குமரன் முதல் பிரதி | | 5000-00 |
| திரு. செ. மற்றாஸ்மெயில் மலர் வெளியீடு | | 5000-00 |
| பெண்கள் தொண்டர் சபை ஆண்டு விழா | | 10000-00 |
| பணியாளர்கள் | | 3000-00 |
| இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் – பவள விழா அரங்கு கலைஞர்கள் | | 40600-00 |
| இசை நடன நிகழ்ச்சி | | 25000-00 |
| வில்லிசை நிகழ்ச்சி | | 20000-00 |
| ஒலிநாடா வெளியீடுகள் | | 8800-00 |
| சமூக சேவைகள் | | 17880-00 |
| பொதுவான அன்பளிப்புக்கள் | | 55755-00 |
| | | 774245-00 |

குறிப்பு இலக்கம் 15

திறப்பு விழா செலவு:

| | |
|---|---|
| அன்ன சத்திரம் | 36406-00 |
| ஆய்வு நூலகம் | 44950-00 |
| | 81356-00 |

குறிப்பு இலக்கம் 15

திருப்பணி :

| | |
|---|---|
| குழாய்க் கிணறு | 13000-00 |
| மதில் வேலை | 72930-00 |
| நீர் இணைப்பு வேலை | 23145-00 |
| வர்ணம் பூசுதல் | 148280-00 |
| பொங்கல் மடம் | 30000-00 |
| சமையல் செய்யும் இடம் | 51390-00 |
| மரக்கறி வெட்டும் இடம் (அன்னசத்திரம் அருகே) | 56387-50 |
| மடைப் பள்ளி | 4939-50 |
| வேலி அடைத்தல் | 1760-00 |
| பொது | 10691-00 |
| | 412523-00 |

உ

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.
பிறந்ததின அறநிதியம்,
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

அன்புடையீர்,

## 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை

மேற்குறிப்பிட்ட நிதியத்திற்கான கணக்காய்வினை மேற்கொண்டு பின்வருவனவற்றை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

**அறநிதியம் ரூபா 1619276-17 சதம்**

சென்ற வருட மீதி ரூபா 1144597-42 சதத்துடன் இவ்வருடத்திற்கான செலவிலும் கூடிய வருமானம் ரூபா 474678-75 சதத்தினை சேர்க்கப்பட்டும் மொத்தமாக ரூபா 1619276-17 சதமாக உள்ளது.

**நிலையான வைப்பு ரூபா 450000-00**

சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக காட்டப்பட்டுள்ளது.

**சேமிப்பு வைப்பு ரூபா 1169276-17 சதம்**

சேமிப்பு வைப்பாக சென்ற வருட மீதி ரூபா 694597-42 சதம் உள்ளது. இவ்வருடம் ரூபா 483990-25 சதம் வைப்பிலிட்டும் ரூபா 90688-50 சதமும் வட்டியாகச் சேர்க்கப்பட்டும் ரூ. 100000/- மீளெடுக்கப்பட்டும் உள்ளது. இவ்வருட இறுதி மீதியாக ரூ. 1169276-17 சதம் உள்ளது.

**வருமான செலவுக் கணக்கு**

**வருமானம் ரூபா 620372-75 சதம்**

இவ்வருட அன்பளிப்பாக ரூபா 427184-25 சதமும் புத்தக விற்பனையாக ரூபா 13100/-வும் நிலையான வைப்பு வட்டியாக ரூபா 89400-00வும் சேமிப்பு வட்டியாக ரூபா 90688-50 சதமும் சேர்க்கப்பட்டும் மொத்த வருமானமாக ரூபா 620372-75 சதமாக உள்ளது.

செலவினம் ரூபா 145694-00

இவ்வருடத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாணவரது கல்விக் கொடுப்பனவாக ரூபா 45000-00மும் கண்பார்வையற்றோர்க்கு உதவு தொகையாக ரூபா 30000-00மும் நூல் வெளியீட்டு விழா செலவினமாக ரூபா 52850-00மும் அறநிதிய விழா செலவாக ரூபா 17844-00மும் ஏற்பட்டுள்ளது.

எனவே மேலதிக வருமானமாக ரூபா 474678-75சதம் கிடைக்கப் பெற்றுள்ளது.

தங்கள் நன்றியுள்ள

**ச. செல்வேந்திரா அன் கோ**

யாழ்ப்பாணம்
03-04-2002

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

உ

# சிவத்தமிழ்ச் செல்வி

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

# பிறந்ததின அறநிதியம்

# 31 - 12 - 2001இல் ஐந்தொகை

அறநிதி :

| | |
|---|---|
| 01-01-2001ல் மீதி | 1144597-42 |
| செலவிலும் கூடிய வருமானம் | 474678-75 |
| | 1619276-17 |

சொத்து வைப்புக்கள் :

| | |
|---|---|
| நிலையான வைப்பு தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் | 450000-00 |
| சேமிப்பு வைப்பு கணக்கு இல. 797 | 1169276-17 |
| | 1619276-17 |

மேலே குறிப்பிட்ட நிதியத்தின் நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளன என உறுதிப்படுத்துகின்றோம்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

சிவத்தமிழ் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்ததின அற நிதியத்திற்கான 31-12-2001ல் உள்ள ஐந்தொகையும் அதே திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான சேவுக் கணக்கினையும் எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள் விபரங்களின் பிரகாரம் பரிசீலனை செய்து தயாரித்துள்ளோம்.

இவை எமக்குத் தரப்பட்ட ஆவணங்களின்படியும் சரியாகவுள்ளனவென்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம்
03-04-2002.

**ச. செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

சிவத்தமிழ்ச் செல்வி

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

## பிறந்ததின அறநிதியம்

## 31 - 12 - 2001ல் முடிவுற்ற ஆண்டிற்கான

## வரவு செலவுக் கணக்கு

வருமானம் :

| | | |
|---|---|---|
| அன்பளிப்பு | | 427184-25 |
| நிலையான வைப்பு வட்டி | | 89400-00 |
| சேமிப்பு வைப்பு வட்டி | | 90688-50 |
| புத்தகம் விற்பனை | | 13100-00 |
| | | 620372-75 |

கழி. செலவினம் :

| | | |
|---|---|---|
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கான கல்விக் கொடுப்பனவு | 45000-00 | |
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கண்பார்வை அற்றோர்க்கான உதவு தொகை | 30000-00 | |
| நூல்வெளியீட்டு செலவு | 12850-00 | |
| அச்சக செலவு | 40000-00 | |
| உபசாரச்செலவு | 12254-00 | |
| ஒலிபெருக்கி வாடகை | 750-00 | |
| தபால் செலவு | 2425-00 | |
| படம் | 2415-00 | 145694-00 |
| செலவிலும் கூடிய வருமானம் | | 474678-75 |

# தேவஸ்தான குருமார், பணியாளர் விபரம்

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
( பிரதான சிவாச்சாரியார் )

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்
( உதவிக் குருக்கள் )

பிரம்மஸ்ரீ சு. சுந்தரராச சர்மா

சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா

பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்தி சர்மா

## பணியாளர்கள்

திரு. கா. சிவபாலன்

திரு. வை. கணேசானந்தன்

செல்வி ச. ரேவதி

செல்வி த. மஞ்சுளா

திரு. பு. ஸ்ரீகாந்தன்

திரு. வி. சிவகுமாரன்

## தேவஸ்தான தவில் நாதஸ்வர வித்துவான்

திரு. இ. இந்திரகுமார் குழுவினர், மல்லாகம்.

## பூமாலை அலங்காரம்

திரு. வ. பஞ்சலிங்கம், மல்லாகம்.

## பாதுகாப்புச் சேவை

திரு. க. சிவபாலசுந்தரம்

திரு. சி. சிவலிங்கம்

திரு. மா. சிவகுலம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.